# காமினி திஸாநாயக்கா பொலிஸ் விசாரணையில்!


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் : 33 சித்திரை 10 ஷவ்வால் 7 இதழ் : 72

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-04-1991


(கொழும்பு)
கடந்த மூன்று வருடங்களுக்கு முன் இடம்பெற்ற ஆள் கடத்தல் சம்பவம் ஒன்று தொடர்பாக முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா பொலிஸாரினால் சென்ற சனிக்கிழமை தீவிரமாக விசாரணைசெய்யப்பட்டார். (4ம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
அராலித்துறை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் நேற்று ஹெலிகொப்டரில் இருந்து பொதுமக்களை நோக்கி கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.
அராலித்துறையில் நின்ற பொதுமக்களை நோக்கி நேற் (4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் தரித்த சிங்களவர் வெலிஓயாவில் குடியேற்றம்

(வெலிஓயா)
வெலிஓயாப்பகுதியில் ஆயுதமேந்திய சிங்களவர்கள் தொடர்ந்து குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.
ஏற்கனவே குடியேற்றப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் ஆயுதம் வழங்கப்பட்டு வருகின்றன.
(4-ம் பக்கம் பார்க்க)

★ எதிர்க் கட்சிகள் யாவும் தேர்தலில்

# ஐ.தே.கட்சியை தோற்கடிக்கும் நோக்கில் அணிதிரண்டுள்ளன!

## பி. பி. ஸிக்கு சுதந்திரக் கட்சி எம். பி. பேட்டி

(லண்டன்)
இலங்கையில் இன்று எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு ஒரு பலமான நிலையிலேயே இருக்கின்றன. தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோல்வியடையச் செய்யவேண்டும் என்ற ஒரு பொது நோக்குடனேயே எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. திரு. நிமால் சிறிபால அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்தபோது பி. பி. ஸி.க்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:
அரச கட்டுப்பாட்டிலுள்ள பொதுசன தொடர்பு சாதனங்கள் 97சதவீதம் அரசாங்க தரப்பினரின் கருத்துக்களையே மக்கள் மத்தியில் பரப்பிவருகின்றன.

ஆனால் எதிர்கட்சியினர் மக்களுக்கு வெளிப்படுத்தும் கருத்துக்களை வெளிப்படுத்தத் தவறுகின்றன:
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு திருமதி சிறிமாவோ பண்டார (4-ம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மோதல்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்குமிடையில் கடும்மோதல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது:
இம் மோதலின்போது இருதரப்பினரிடையேயும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.
சில மணித்தியாலங்கள் (4-ம் பக்கம் பார்க்க)

### வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)
மன்னார் பரப்புக்கடந்தானில் கடந்த 19ம் திகதி நடைபெற்ற சிலங்கா இராணுவத் (4ம் பக்கம் பார்க்க)

## விசேட பரீட்சை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
இன்று ஆரம்பமாகும் க. பொ. த (உயர்தர) விசேட பரீட்சை அடுத்தமாதம் 18ம் திகதி வரை நடைபெறவுள்ளது:
யாழ்: மாவட்டத்தில் இப்பரீட்சைக்காக 70 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன;

## பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சை (1990) நடக்கும் காலங்களில் அதிபர்களும், அபிவிருத்திச் சபையினர் பொதுமக்கள் பரீட்சை நிலையங்களுக்குப் பாதுகாப்பாக விழிப்புக்குழு அமைக்க வேண்டும்" என்று யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.
பரீட்சை சிறந்த முறையில் நடைபெறவேண்டும். இதற்கு (4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் குறைந்தளவுபரீட்சார்த்திகள்

(மட்டுநகர்)
இன்று ஆரம்பமாகும் க.பொ. த.(உயர்தர) விசேட பரீட்சைக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக்குறைந்த தொகையான மாணவர்களே தோற்றவுள்ளதாக அங்கிருந்து (4-ம் பக்கம் பார்க்க)

## தளபதி கிறேஸியின் புகழுடல் நேற்று தீயுடன் சங்கமம்!

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி மாவட்டத்தின் மறைந்த தளபதி லெப். கேணல் கிறேஸியின் புகழுடல் பல்லாயிரக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலியை யடுத்து கிளிநொச்சியிலுள்ள கனகபுரம் மாவீரர் மயானத்தில் நேற்று தீயுடன் சங்கமமானது.
கடந்த 19ம் திகதி மன்னார்-பரப்புகடந்தானில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை கிறேஸியின் புகழுடல் யாழ்: குடாநாட்டு மக்களின் அஞ்சலியையடுத்து கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது:
கிளிநொச்சியில் அவரது சொந்த இடமான வட்டக் (4-ம் பக்கம் பார்க்க)

## மூடிய வாகனத்தில் வரும் வினாப் பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள். மூடிய வாகனத்தில் பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்.
(4-ம் பக்கம் பார்க்க)

## மொனராகலை காடுகளில் பெரும் தேடுதல் வேட்டை

(கொழும்பு)
மொனராகலை மாவட்டத்தில் உள்ள காடுகளில் இராணுவத்தினரும், அதிரடிப் படையினரும் இணைந்து பெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இம்மாவட்டத்தில் உள்ள உகும்பிட்டிய கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தையடுத்தே இத்தேடுதல் வேட்டை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இம்மாவட்டத்தில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது; (ரி)

சந்திரசேகர்

## நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தார்

(புதுடில்லி)
இந்தியப்பிரதமர் திரு.எஸ். சந்திரசேகர் நேற்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்:
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜம்மு-காஷ்மீரில் 13 பேர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம் 8 தீவிரவாதிகள் உட்பட 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மற்றொரு சம்பவத்தில் ஐவர் கொல்லப்பட்டனர். படையினர் 13 பேரை கைது செய்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக அமைதியாக இருந்த இம் மாநிலம் தற்போது மீண்டும் கலவரங்களுக்குள்ளாகி வருகிறது.

இந்தியாவில் ஜம்மு காஷ்மீரை தவிர ஏனைய சகல மாநிலங்களிலும் தேர்தல் நடைபெறவுள்ளதும் தெரிந்ததே.

## குளவிக்கு வைத்த தீ குடிசையை எரித்தது

(மாங்குளம்)

குளவிக்கூட்டுக்கு வைத்த நெருப்பால் அருகிலிருந்த ஒலைக் குடிசை முற்றாக எரிந்து சாம்பரானது.

அக்குடிசைக்குள் இருந்த பெறுமதியான பொருட்கள் பலவும் முற்றாக எரிந்து சாம்பராகிவிட்டது.

அல்வாய் வடக்கு இனைத்துரைகனகம்மா என்ற சந்தை வியாபாரியின் குடிசையே முற்றாக எரிந்து சாம்பரானதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

## மடு தேவாலய அகதிகள் சுகாதார வசதியின்றி அவதி

[யாழ்ப்பாணம்]

மன்னார் மடு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதி முகாமில் தங்கியுள்ளோர் சுகாதார வசதிக்குறைவால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மருந்து வசதியின்மையினாலும், போதியளவு சுகாதார வசதியின்மையினாலும் தொற்று நோய்கள் தீவிரமாகப்பரவி நெருப்புக்காய்ச்சல் வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கிலக்காகி பல குழந்தைகள் இறந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பெரியோர்களும் இவ்வருத்தங்களுக்குள்ளாகி அவஸ்தைப்படுவதாகவும் பசி பட்டினியினை எதிர் நோக்குவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெறுவதாலும், கடும் விமான தாக்குதலாலும் வேறிடங்களுக்கு செல்லமுடியாது பலர் பெரும் துன்பமடைந்து வருகின்றார்களாம். [56]

## இராசி பலன்

23-04-1991

செவ்வாய்க்கிழமை

தசமி பி: இ. 4-52 மரை, ஆயிலியம் ந. ப: 12-12 வரை, மரணயோகம், இராகுகாலம் மாலை 3-00 முதல் 4-30 வரை, சுபநேரம் காலை 10 30 முதல் 12-00 வரை.

மேடம்: மனஉளைச்சல், அகால போசனம், தொழில் பாதிப்பு.

இடபம்: காரிய அனுகூலம், கடன் வரவு, குடும் சுகம்.

மிதுனம்: ஏமாற்றம், மன வேற்றுமை, நிம்மதியின்மை.

கடகம்: கல்வி ஆராய்ச்சி, தொழில் சிறப்பு, பயணங்கள் அனுகூலம்.

சிங்கம்: இனசனப்புகை, தொழில் அலைச்சல், காரியத்தடை.

கன்னி: பற்றின்மை, தூரத்து உறவு, தொழில் லாபம்.

துலாம்: வாக்கு வன்மை, நண்பர்கள் உதவி, தானதர்மம்.

விருச்சிகம்: ஆடம்பரச் செலவு, சகோதர விரோதம், துயரம்.

தனுசு: தடுமாற்றம், குடும் பக்கவலை, தன்நிலையுணர்தல்.

மகரம்: தொழில்பாராட்டு, புத்திரர் சிறப்பு, குடும்ப மகிழ்ச்சி.

கும்பம்: வாகனச் சிறப்பு, இனசனவருகை, வீட்டில் சுககாரியம்.

மீனம்: சஞ்சலப்படுதல், பணக் கஷ்டம், வைத்தியச் செலவு.

- ஜோஸ்யர்

## திடீர் மின்சாரத்தினால் ஆபத்து ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சாலைகளிலோ அல்லது வீடுகளிலோ தங்களது தேவையின்பொருட்டு ஜெனரேற்றர் பாவிக்குமிடத்து ஏற்படும் கவனயீனத்தினால் ஏனைய சில வீடுகளுக்கும் எதிர்பாராத விதமாக மின்சாரம் வருகிறது. இவ்வாறு திடீரென தோன்றும் மின்சாரத்தினால் உயிராபத்து ஏற்படலாம். சொத்துக்கள் சேதமடையலாம்.

மாவட்டத் தொழிற்சாலை பரிசோதசனைக் காரியாலயத்தைச் சேர்ந்த மின்பொறியியலாளர் க கி. மகேந்திரராஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: பாஷையூரில் எதிர்பாராதவிதமாக ஒரு சில வீடுகளில் மின்சாரம் வந்தது தெரிந்ததே; மேற்கூறியவிதத்தில் இந்த மின்சாரம் அந்த வீடுகளுக்கு வந்திருக்கவேண்டும்.

தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களினதும், வீடுகளில் உள்ளவர்களின் பாதுகாப்புநலன் கருதி கீழ்க்காணும் வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.

★ பிரதான மின் ஆளி (Main Switch) செயலற்ற (Off) நிலையில் இருத்தல் வேண்டும்.

★ பாதுகாப்புஆளி (Trip Switch) செயலற்ற (Off) நிலையில் இருத்தல் வேண்டும்.

★ எல்லா ஆளிகளும் (Switch) செயலற்ற (Off) நிலையில் இருத்தல்வேண்டும்.

★ எல்லா ஹோல்டரிலும் (Hoder) மின் குமிழ்கள் (பழுதடைந்தாலும் பரவாயில்லை) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

★ குறைபாடுள்ள மின்சுற்றுக்களினை பியூஸ் பெட்டி (Distribution Fuse board) யில் இருந்து அகற்றப்பட்டிருத்தல்வேண்டும். (இதற்கு திறமையுள்ள எலக்ரீஷனின் உதவியை நாடவும்)

★ ஜெனரேற்றர் பாவிக்கும் அவசியமேற்படினும் தகுந்த உத்தரவுடனும் திறமையுடைய எலக்ரீஷனின் உதவியை நாடவேண்டும்.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நிமியா உரத்தை யூரியாவுடன் கலந்து பாவிப்பதால் பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரமாகிறது வாய்க்கால் நீரில் கழுவுப்பட்டோ அன்றி நீராவியாக மாறியோ யூரியாவின் சக்தி விரயமாகாமல் தடுக்கிறது நிமியா உரம். ஒரு கிலோ பக்கெற் ரூ. 9-00 மட்டுமே. மில்க்வைற் - யாழ்ப்பாணம். [எ-1236]

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

சிறந்த பெறுபேறுகளை வருடாவருடம் பெற்றுக்கொடுக்கும் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5ற்கான மாதிரி புலமைப் பரிசில் பரீட்சை (முதலாவது) வெளிமாணவர்களுக்கானதும் (மூன்றாவது) உள்ளக மாணவர்களுக்கானதுமான பரீட்சை 28-04-91 ஞாயிறு மு: ப, 8.00 மு. ப. 10. 30 மணி நேரங்களில் நடைபெறும் முற்கூட்டியே பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4668)

### கொம்பியூட்டர் பயிற்சி

IDPயின் சேவை மீண்டும் ஆரம்பம்

BASIC, D-BASE - III + Courses

ஆரம்பம் 28-04-91 (8-30 A. M)

IDP COMPUTER CENTRE
MANIPAY Rd, MANIPAY

[மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி] [சி-4667]


## வீதியில் துர்நாற்றம் பாதசாரிகள் அவதி

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாணம் பொம்மைவெளிச்சந்திக்கும் காக்கைதீவு சந்தைக்குமிடையேயுள்ள அராலி வீதியில் துர்நாற்றம் வீசுவதால் இந்த வீதியால் செல்லும் பாதசாரிகளும், சைக்கிள் மற்றும் ஏனைய போக்குவரத்து பிரயாணிகளும் பெரும் அவதியடைந்து வருகிறார்கள்.

இந்த வீதியின் ஓரங்களில் குப்பை கூழங்கள் போடுவது மாத்திரமல்லாது இறந்த ஆடு மாடுகள், நாய், பூனைகளையும் குப்பைக்குள் போட்டுவிடுகின்றனர்.

இவற்றின் துர்நாற்றத்தால் இப்பாதையால் செல்லும் பிரயாணிகள் மூக்கைப் பொத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இறைச்சியை நாய்கள், காகங்கள் சாப்பிட்டு முடியும் வரை இவை வீதி ஓரங்களிலேயே கிடக்கும். [154]

## வர்த்தகம் கற்க மாணவர் ஆர்வம்

(உடுவில்)

இவ்வருடம் ஆண்டு ஒன்பதில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள கனிஷ்ட தொழில்நுட்பசி சான்றிதழ் பரீட்சைக்கு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளிலிருந்து 70 வீதமான மாணவர்கள் தொழில்நுட்பப் பாடங்களில் ஒன்றான வர்த்தகத்தை படிப்பதற்கு முன்வந்துள்ளனர்.

ஏனைய தொழில்நுட்பப் பாடங்களான மனைப்பொருளியல், விவசாயம், மற்றும் 53 தொழிற்பாடங்களையும் ஏனைய 30 வீத மாணவர்கள் கற்பதற்கு முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள தொழில்நுட்பப் பிரிவுமதிப்பீடுகளின்படி மேற்படி விபரங்கள் தெரியவந்துள்ளன. (109)

## தமிழ்நாடு தேர்தல் களம்

### வைஜெந்திமாலா பம்பாயில் போட்டி

தென் சென்னை எம். பி. யான வைஜெயந்திமாலாவை இம்முறை பம்பாய் தொகுதியில் நிறுத்த காங்கிரஸ் ஆலோசித்துவருகிறது.

கடந்த தேர்தலில் இவர் காங்கிரஸ் சார்பில் தென் சென்னையில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். தென் சென்னையிலிருந்து தான் அகற்றப்படுவதை வைஜெயந்திமாலா விரும்பவில்லையென்றும், இதுபற்றி அவர் காங்கிரஸ் மேலிடத்திற்கு ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

### அ. தி. மு. க. முதல் கூட்டம்

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் செங்கல்பட்டில் நடந்த முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசினார். மாநிலத்தில் நிலையான ஆட்சிவேண்டும் என்று இக்கூட்டத்தில் அவர் வலியுறுத்தினார். இதனைத்தொடர்ந்து அயல் கிராமங்களில் நடந்த கூட்டங்களில் அ. தி. மு. க. வேட்பாளர்களை அவர் அறிமுகம் செய்துவைத்தார்.

### கலைஞர் பிரசாரம்

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி மே மாதம் முதலாம் திகதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கவிருக்கிறார். தமிழ்நாடு எங்கும் சூறாவளி பிரசாரதிட்டத்தை தி. மு. க. வகுத்துள்ளது. இதன்படி கலைஞர் கருணாநிதி தினமும் 25 கூட்டங்களில் உரையாற்றுவார். இதுதவிர அவர் செல்லும் வழியில் மக்களின் ஆதரவை திரட்ட அந்தந்தப்பகுதி தி. மு. க. ஆதரவாளர் ஏற்பாடு செய்துள்ளனர். இறுதிக் கூட்டம் சென்னையில் நடைபெறும். இக்கூட்டத்தில் தி. மு. க. கூட்டணியை சேர்ந்த தலைவர்கள் யாவரும் உரைநிகழ்த்துவார்கள்.

### அமைதியான தேர்தல்

தமிழ்நாட்டில் அமைதியாகவும் தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல் ஆணையாளர், மாநில அரசின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில தேர்தல் அதிகாரி திருரகுபதி தெரிவித்தார்.

### 25, 000 முன்னாள் படையினர்

தமிழ்நாடு தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு 25,000 முன்னாள் படையினரும் 7500 ஊர்காவல் படையினரும் தேர்தல் காலங்களில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிகமான படைகளை தேவைப்படும் பட்சத்தில் அனுப்பிவைக்குமாறு மத்திய அரசிடமும் கோரப்பட்டுள்ளது.

### தேர்தல் கால ஊழியர் பயிற்சி

தமிழ் நாட்டில் தேர்தல் காலத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வகுப்புகள் அடுத்தவாரம் ஆரம்பமாகும் தமிழக தேர்தல் பணிக்கு மத்திய அரச ஊழியர்களும் பயன்படுத்தப்படுவார்கள்.

### விழுப்புரத்தில் ஒருவர் பலி

விழுப்புரத்தில் தி. மு. க. ஆதரவாளர்களுக்கும் அ. தி. மு. க. ஆதரவாளர்களுக்குமிடையில் நடந்த மோதலில் ஒருவர் கத்திக்குத்துக்கு பலியானார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதிக்குசிறப்பு பொலிஸ் படை அழைக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் 'ஸ்கட்' ஏவுகணை தாக்குதல்

# 300 அப்பாவிப் பொதுமக்கள் பலி

## 700 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர் நிலை ஒன்றின் மீது படைகள் மேற்கொண்ட 'ஸ்கட்' ஏவுகணை தாக்குதலில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

முஜாகுதீன் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டிலுள்ள குன்னூர் மாகாணத்தின் மீது படையினர் 'ஸ்கட்' ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் கௌடபாத் நகரில் முக்கிய சந்தை ஒன்றில் விழ்ந்து வெடித்ததில் 300 பேர் வரை கொல்லப்பட்டனர், 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

பல கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன. கடைகள் யாவும் தகர்ந்து போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அரச படைகளின் இச்செயல் குறித்து ஐ. நா. பலத்தகண்டனம் தெரிவித்துள்ளது. சடலங்கள் இடிபாடுகளிடையே இருந்து அகற்றப்பட்டு வருவதால் கொல்லப்பட்டவர்களின் முழு விபரமும் சரியாக கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ★ வட ஈராக்கில் அகதி முகாம்

# அமெரிக்க நடவடிக்கைக்கு ஈராக் - ஈரான் கடும் எதிர்ப்பு

(பாக்தாத்)

ஈராக் வடபகுதியில் அமெரிக்கா அகதிகள் முகாமை அமைத்து தனது துருப்புகளையும் அங்கு அனுப்பியுள்ளதை ஈராக்கும் - ஈரானும் கடுமையாக கண்டித்துள்ளன.

குர்திஷ் - அகதிகளுக்கென அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உதவியுடன் 3 அகதி முகாம்களை அமைத்து அதற்கு பாதுகாப்பாக பெருமளவு படைகளையும் அங்கு அமர்த்தியுள்ளது.

ஈராக்கின் உள்விவகாரத்தில் அமெரிக்கா வேண்டுமென்றே தலையிடுவதாகவும் இதனை ஐ. நா. கண்டிக்க வேண்டுமென்றும் ஈராக்கும்-ஈரானும் குற்றம் சாட்டியுள்ளன.

மேலும் சில முஸ்லிம் நாடுகளும் இந்த நடவடிக்கையை கண்டித்துள்ளன. (சி)

## வண்டிலால் விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

தனது மாட்டுவண்டிலைச் செலுத்திக்கொண்டு வீதியால் வந்த ஒருவர் மாடு இடறியதில் தவறிவிழுந்து வண்டிச் சில்லுக்குள் அகப்பட்டு கால்கள் கடும்பாதிப்பிற்குள்ளாகிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகசுந்தரம் 32 வயது என்பவரே இந்நிலைக்கு ஆளானார். (56)

## படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நுங்கு வெட்ட பனையில் ஏறியவர் நுங்குடன் தவறி வீழ்ந்து இடுப்புப்பகுதி கடும் பாதிப்பிற்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் தெற்கைச்சேர்ந்த இந்திரன் சண்முகானந்தன் (19வயது) என்ற இளைஞரே பனையில் ஏறி வீழ்ந்தவராவர்.

# மே தினத்தன்று உழைப்பாளர்களைக் கௌரவிக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மண்ணில் வாழும் உழைக்கும் மக்களை மேதினத்தன்று கௌரவிப்பதற்கு விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக முன்னணி வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் பல்வேறு போட்டிகளை தென் தமிழீழம் தவிர்ந்த தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச ரீதியாக அல்லது பிரிவுரீதியாக நடத்தி வெற்றி பெறுவோருக்கு பரிசில்களை வழங்கவிருக்கிறது.

தரிசாக விடப்பட்ட விவசாய நிலங்கள், ஒவ்வொரு பிரதேசங்களில் அல்லது பிரிவுகளில் நிலமற்ற-வசதியற்ற ஊக்கமுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக்குழுக்கள் மூலம் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்காக மேதினத்தன்று வழங்கப்படும்.

அத்தோடு மே தினத்தில் குளம் திருத்துதல், வாய்க்கால் புனரமைத்தல் போன்ற வேலைகளைச் சிரமதான மூலம் செய்வதற்கு ஆரம்ப வேலைகள் பிரதேசரீதியாக அல்லது பிரிவு ரீதியாக மாவட்டம் தோறும் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். மேதினத்தன்று காலை 6-00 மணி தொடக்கம் 9-00மணி வரை இந்நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மே தினத்தை அடுத்துவரும் தினங்களில் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்படும் வேலைத்திட்டங்கள் முடிக்கப்படும்.

மே தினத்தையொட்டி மாவட்டங்கள் தோறும் நடைபெறவுள்ள போட்டி நிகழ்ச்சிகள்.

1. பதநீர் வடித்தல்

பனை மரத்தில் குறிப்பிட்டளவு உயரத்தில் கட்டப்பட்டுள்ள மணியை ஒருவர் ஏறி ஒலிக்கச்செய்துவிட்டு இறங்கி தரையில் கால் மிதிக்கவேண்டும். இறங்கும்போது மரத்தில் சறுக்கியபடியோ அல்லது மரத்தைவிட்டுப் பாய்ந்தோ தரையை அடைவது போட்டி விதிகளை மீறியதாக கருதப்படலாம்.

2 துலா மிதித்தல்

பாரம்பரிய முறையில் ஒருவர் துலா மிதிக்க இன்னுமொருவர் பட்டையால் நீர் இறைக்கவேண்டும். போட்டியாளர்கள் சோடியாகப் பங்குபற்றவேண்டும்.

3. உழவு செய்தல்

குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள உழுத நிலத்தை மாட்டினால் மரக்கலப்பை கொண்டு உழவேண்டும். கலப்பை நிலத்தினுள் செலுத்தப்படும் ஆழம் உழவு செய்தவரிகளுக்கிடையில் இடைவெளி ஆகியவை குறிப்பிட்ட அளவுக்குள் குறையாமல் அல்லது கூடாமல் இருத்தல்வேண்டும்.

4. பாய்மர ஓட்டம்

5. தண்டு வலித்தல்

இவற்றிற்கான விபரங்களை அவ்வப்பகுதியிலுள்ள கடற்றொழில் சங்கங்கள் அல்லதுபிரதேச இணைப்பாளர் அல்லது பிரிவு இணைப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

6. கைப்பணி

(அ) பனையோலையால் பெரிய குட்டான் இழைத்தல்

½ அங்குல அகலமுடைய ஓலையில் 10'' அங்குல உயரமும் 5'' விட்டமும் உடைய குட்டான் இழைக்கப்படவேண்டும். போட்டியாளர்கள் இதற்குத் தேவையான ஓலையைக் கொண்டுவரவேண்டும்.

(ஆ) தென்னை ஓலையால் கிடுகு இழைத்தல்

சம அளவான தென்னை ஓலையால் கிடுகு இழைக்க வேண்டும்.

7. சிறுகைத்தொழில்

மூலப்பொருள்கள் பெறக்கூடிய பிரதேசங்களில் தும்புத்தடி அல்லது தடி விளக்குமாறு போன்றவற்றை செய்தல்.

8. உள்ளூர் மூலப்பொருட்களை கொண்டு புதியவகை உணவுப் பொருட்களை தயாரித்தல்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை உபயோகித்து புதிய உணவுப் பொருள்களைத் தயாரித்து கையளிக்க வேண்டும். தயாரித்த முடிவுப் பொருள் 200 கிராம் நிறைக்குக் குறையாமல் இருக்க வேண்டும். தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டமூலப் பொருள்களின் பெயர், அளவு விபரங்களுடன் செலவையும் முடிவுப் பொருள் அளவையும், செய்கை முறையையும் தயாரித்து உணவுப் பொருள்களுடன் எழுத்தில் சமர்பிக்கவேண்டும் (செய்கை முறையில் பேணப்பட்ட சுகாதாரம், சுவை, கவர்ச்சி, உறைபிடல் பொதிதல், அல்லது வேறு கொள்கலன்களில் அடைத்தல் போன்றவை பொருள்களின் தரங்களைத் தெரிவு செய்யும் போது மத்தியஸ்தர்களால் கருத்திற் கொள்ளப்படலாம்.

யாழ். மாவட்டத்திற்கான ஏற்பாடுகள்

போட்டிக்கான விண்ணப்பங்கள் 21-4-91க்கு முன் அந்தந்தப் பிரிவு கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் கையளிக்கப்படவேண்டும். போட்டியாளர்களின் பெயர், வயது, விலாசம், என்பனவற்றைக் குறிப்பிட்டு பங்குபற்ற விரும்பும் போட்டியின் பெயரையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். பிரிவு இணைப்பாளர்கள் போட்டிகளில் முதலாம், இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை 25-4-91க்கு பிந்தாமல் தமிழீழ ஆய்வு நிறுவனயாழ். மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும், மாவட்டத்தெரிவிற்கான போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு மேதினத்தன்று மேதினக் கூட்டத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும்.

## கள் இறக்க ஏறியவர் பனையால் விழுந்து மரணம்

(மாங்குளம்)

கள் இறக்கும் சீவல் தொழிலாளி தவறுதலாக பனையால் விழுந்ததால் துடிதுடித்து பரிதாப நிலையில் அவ்விடத்திலேயே மரணமானார்.

அலைவாய்குருக்கட்டுப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த குலசிங்கம் என்ற சீவல் தொழிலாளியே மரணமானவர் இவருக்கு மூன்று பிள்ளைகளும் உள்ளனர். (150)

## நிவாரணக் கொடுப்பனவு இடைக்காமல் அவதி

(காங்கேசன்துறை)

வலி: வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு மீளக் குடியமர்த்தல் நிவாரணம், தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நன்கொடை போன்ற கொடுப்பனவுகள் எதனையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இம்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும்மேற்படிகொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றபோதும் இராணுவ நடவடிக்கையால் பாதிப்புக்குள்ளாகியுள்ள வலி. வடக்கு மக்கள் இவற்றை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனத் தெரியவருகிறது.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பீப்பாக்குண்டுத்தாக்குதலால்

(4-ம் பக்கம் பார்க்க)

## கட்சி மோதல் 16 பேர் பலி

(ஜொகன்ஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், மற்றொரு கட்சியினருக்கும் நடந்த மோதலில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

தென்னாபிரிக்க அதிபர் இம்மாதம் 26ம் தேதி சமாதான மாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்பாடு செய்துள்ள இவ்வேளை கட்சிகளிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

பிரச்சினை மேலும் தொடராமலிருக்க இரு கட்சி மேலிடங்களும் சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன.

# உணவுமுத்திரைகொடுப்பனவு இழுபறி நிலை நீக்க திட்டம்

[காங்கேசன்துறை]

உணவு முத்திரைக்கான கொடுப்பனவில் அரசாங்க செயலகத்திற்கும், ப. நோ. கூ. சங்கங்களுக்குமிடையில் இருந்து வந்த இழுபறி நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க புதிய திட்டம் ஒன்று செயல் படுத்தப்படவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் ப நோ. கூ சங்கங்களுக்கும் அரசாங்க அதிபர், மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இப்புதிய திட்டம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் உணவு முத்திரைக்கு தமது இருப்பிலிருந்து பொருட்களை வழங்குவதும், பின்னர் அதற்கான கொடுப்பனவை அரசாங்க செயலகத்திலிருந்து பெறுவதற்கு காலதாமம் ஆவதும் இதனால் தமது வர்த்தக முயற்சிகள் பாதிக்கப்படுவதாக ப. நோ. கூ. சங்கங்கள் குற்றஞ் சாட்டுவதும் கடந்த காலத்தில் இடம்பெற்றவையாகும்.

ஆனால் புதிய திட்டத்தின்படி உணவு முத்திரைக்கான கொடுப்பனவை ப. நோ கூ. சங்கங்கள் மக்கள் வங்கியிலிருந்து காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளவும், பின்னர் அரசாங்கம் மக்கள் வங்கிக்கு அத்தக் கொடுப்பனவை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வரட்சி நிவாரண முத்திரைகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கும் இதே நடைமுறையே பின்பற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [86]

# இடம்பெயர்ந்தோருக்கு உதவ சுகாதார தொண்டர் தெரிவு

(காங்கேசன்துறை)

இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களின் அடிப்படை சுகாதாரவசதிகளையும், அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்தும் பணிக்காக 30 சுகாதார நலத் தொண்டர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கையால் யாழ்.குடா நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்து பெரிதும் கஷ்டமுறுகிறார்கள்.

இவ்வாறு கஷ்டமுறும் மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை உடனுக்குடன் ஏற்படுத்தவும், அவர்களது புனர் வாழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் யாழ். சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந் நடவடிக்கைகளுக்காகத் தெரிவுசெய்யப்படும் சுகாதார நல தொண்டர்களுக்கு இணுவிலில் இயங்கும் தெல்லிப்பழை சுகாதாரப் பயிற்சிநிலையத்தில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இரு வார காலப் பயிற்சி முடிந்ததும் இவர்கள் அகதி முகாம்களிலும், அகதிகள் கூடுதலாக தங்கியுள்ள பகுதிகளிலும் கடமைக்கு அமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (86)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பெரியதம்பிரான் கோயில் வருடாந்தப் பொங்கல் விழா நாளை புதன்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பகல் திக்குளிப்பு வைபவமும் பூசை ஆராதனைகளும் நடைபெறவுள்ளது.

## பரீட்சைக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். பரீட்சை நிலையங்களை இரவு நேரமும் கண்காணிக்க வேண்டியிருப்பதால் பாடசாலை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி சபையினர் பொதுமக்கள் யாவரும் விழிப்புக்குழு அமைத்து இந்த விசேட பரீட்சை ஒழுங்காக நடக்க ஒத்துழைப்புதர வேண்டும்'' என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார். (152)

## மட்டு. மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இராணுவநடவடிக்கையினால்மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் பல பாடசாலைகள் இயங்காமலிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிக்கான பரீட்சை வினாத்தாள்கள் விமானமூலம் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

## மூடிய வாகனத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை நடைபெறும் காலங்களில் பாதுகாப்புக் கருதி நீலமும், வெள்ளையும் கலந்த கொடி பரீட்சை நிலையங்களில் பறக்கவிடப்படும் என்று கல்விப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (152)

## பஸ் விபத்தில் 47 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பஸ் விபத்தில் 47 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் படுகாயமடைந்தனர்.

தலைநகர் டாக்காவிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் இந்த பஸ் விபத்து நடைபெற்றது. (க)

## நிவாரணக்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சேதமுற்று இடம்பெயர்ந்து மல்லாகத்தில் இயங்கிவருகிறது. கிராமசேவை அலுவலர்களும் தமது தஸ்தாவேஜுகளை விட்டு திடீரென வெளியேறி வெவ்வேறு இடங்களில் கடமைபுரிந்துவருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி நிவாரணக் கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தி அவற்றை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு வழங்க முடியாதுள்ளதாக கூறப்படுகிறது. (86)

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டப்பகுதியில் கடமை புரியும் சகல அதிபர்களையும் யா/வேலணை ம. ம. வித்தியாலய மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு வேலணைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

## அமெரிக்க குழு விஜயம் செய்யும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ் குடாநாட்டின் பல பகுதிகளுக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளார்கள்.

ஏற்கனவே 15,000 விவசாயிகளுக்கு வழங்கிய மண்ணெண்ணை, பசளை போன்ற பொருட்களால் யாழ். குடா நாட்டு விவசாயிகள் எவ்விதம் பலன் பெற்றுள்ளார்கள் என்றும் அத்தோடு அவர்களுக்கு மேலதிக உதவிகள் வழங்க வேண்டுமா என்பது பற்றியும் அவர்கள் ஆராயவுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது. (452)

## எதிர்க்கட்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்காவுடன் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் ஜனாதிபதியை இருதடவை சந்தித்தோம்.

தேர்தலுக்கு முன் அவசரகாலச்சட்ட விதிகளை முற்றாக நீக்குமாறும், நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்காக இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் உள்ளதைப்போன்று தேர்தல் கமிஷன் ஒன்றை, அமைக்குமாறும் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டோம்.

ஆனால் முன்னறிவித்தல் எதுவுமின்றி அரசாங்கம் திடீரெனத் தேர்தலை அறிவித்து விட்டது.

அண்மையில் இடம்பெற்ற அன்னையர் முன்னணியின் பேரணியில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓரணியாகத் திரண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை மீறல்கள், சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவதன் அவசியம் போன்ற விடயங்களை எதிர்க்கட்சிகள் அரசின் கவனத்துக்கு வலியுறுத்தி வந்திருக்கின்றன.

இன்று இலங்கையில் நாடாளும் மன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகள் ஒருபொதுவான உடன்பாட்டின் கீழ் ஓரணியாகத் திரண்டிருப்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

## அன்னை நினைவாக விசேட பூசை

(புங்குடுதீவு)

தமிழ்த் தியாகி அன்னை பூபதியின் மூன்றுவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வேலணை பெருங்குளத்து முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை ஒன்று நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட விசேட பூசையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவக நிர்வாக அரசியல் பொறுப்பாளர் சுதா உட்பட விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## வீர வணக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை நேரடி மோதலில் விடுதலைப்புலிகள்இயக்கத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன் [யாழ்ப்பாணம்] 2ம் லெப்- சீலோ வீர மரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## சந்திரசேகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரப் பிரதேசத்திலுள்ள பலியா தொகுதியிலிருந்து லோக்சபா தேர்தலில் திரு சந்திரசேகர் போட்டியிடுகிறார்.

பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானியும் நேற்று தனது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார்.

## ஆயுதம் தரித்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆயுதங்கள் மூலம் இப்பகுதியிலுள்ள தமிழர்கள் சிங்களவர்களால் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்.

அண்மையில் இப்பகுதியில் பதினாறு தமிழர்கள்கொடுமையான முறையில் சிங்களவரால் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர்களுக்கு மார்ச் மாதத்துக்கான 'வவுச்சர்கள்' அடுத்தவாரமளவில் யாழ். செயலகத்திலிருந்து தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

ஏற்கனவே பெப்ரவரிமாதத்துக்குரிய ஓய்வூதியம் வங்கிகளில் தற்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றன. (152)

## தபால்களை நாளை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் தங்கிநிற்கும் 'வில்லிவில்லி' கப்பல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை கொழும்பு நோக்கிப் புறப்படுமென எதிர்பார்க்கப் படுவதால் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ்.பிரதம தபாலகத்தில் தபாலில் சேர்க்கும்படி யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. இராஜேந்திரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# படகுகளுக்கு எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டது

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினரால் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுவந்த எரிபொருள் கடந்த வாரம் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

படகுகளுக்கு வழங்குவதற்காக பெருந்தொகையான எரிபொருட்கள் முகாமில் இருக்கின்றபோதிலும் அதனை கடற்படையினர் கொடுக்க மறுத்துவருகின்றனர் என்று கூறப்படுகிறது. இதனால் நெடுதீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு வரும் பிரயாணி ஒருவருக்கு இருபது ரூபாவாக படகுகட்டணம் அறவிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடற்படை ரோந்தில் நவீனரக பீரங்கிக் கப்பல்

(புங்குடுதீவு)

கடந்த சில நாட்களாக மண்டைதீவு, புங்குடுதீவு நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய கடல் பகுதியில் தீவிரரோந்து நடவடிக்கைகளில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பாரிய நவீனரக பீரங்கிக் கப்பல் ஒன்று ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பீரங்கிக்கப்பலிருந்து அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருக்கின்றன. [101]

# ல. பி. போ. சபையின் மூன்று கணக்காளர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த மூன்று கணக்காளர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது.

மத்திய போக்குவரத்துச் சபை தலைமை அலுவலகத்திற்கு நேற்று 22-ம் திகதி முதல் இம்மூன்று கணக்காளர்களுக்கும் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு கணக்காளர்களான திரு. கே. கணேசபிள்ளை, திரு. கே.சபாநாதன், திரு. எம். அருள் சோதிநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதிகள், நடத்துநர்கள் ஏனைய பகுதி ஊழியர்களுக்கு ஏற்கனவே இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டதும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததும் தெரிந்ததே. (சி)

## காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1988ம் ஆண்டு பேராசிரியர் புல்ஜென்ஸ் கடத்தப்பட்டது தொடர்பாக இவர் விசாரணை செய்யப்பட்டார்.

இந்த ஆள் கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சில சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதை அடுத்து திரு. காமினி திசநாயக்கா மீதும் விசாரணை நடத்தப்பட்டது.

ஒன்றரை மணித்தியாலம் வரை இவர் விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ரி)

## மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைவிடாது இம்மோதல் தொடர்ந்து நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் சேதவிபரங்கள் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இப்பகுதியில் இரு பகுதியினரிடையேயும் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹெலி தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

று பிற்பகல் ஹெலியில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலின்போது அரசரட்ணம் கைலாசநாதன் (வயது 31 அல்வாய்) என்பவர் படுகாயமடைந்தார்.

ஊர்காவற்துறை, நாரந்தனையில் நேற்று நண்பகல் ஹெலியிலிருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டபோது மதிலுக்கு மேலால் ஏறிக்குதிக்க முயன்ற ஒரு இளைஞர் படுகாயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவத்தில் டி. அன்ரன் பிரேமதாஸ் [27 வயது நாரந்தனை) என்பவரே காயமடைந்தவராவார். [56]

## லொறி விபத்தில் வியாபாரி படு காயம்

[யாழ்ப்பாணம்]

வவுனியாவுக்குச் செல்லும் வியாபாரி ஒருவர் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் லொறி ஒன்றினால் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் ஓமந்தையில் இடம்பெற்றது.

154ம் கட்டை செல்வபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த குஞ்சப்பு முருகேசு [25 வயது] என்ற வியாபாரியே விபத்துக்குள்ளாகியவர். [56]

## தளபதி

1-ம் பக்கத் தொடர்ச்சி]

கச்சி மகாவித்தியாலயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீரவேங்கையின் புகழுடலுக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தார்கள்.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி உட்பட பல பிரமுகர்கள் அஞ்சலி உரையாற்றினார்கள்.

அஞ்சலி உரையின் பின்னர் பாண்டியன் குளம், மல்லாவிப் பிரதேச மக்களின் இறுதி அஞ்சலிக்காக கிறேஸியின் புகழுடல் வைக்கப்பட்டது.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழுதவாறு தமது இறுதி அஞ்சலியைத் செலுத்தியதைக் காணக் கூடியதாகவிருந்தது.

தொடர்ந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக அமைக்கப்பட்ட விசேட மேடையில் கிறேஸியின் புகழுடல் பொதுக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இறுதியில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் மயானத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடனும், விடுதலைப்புலிகளின் அணிவகுப்பு மரியாதையுடனும் லெப் கேர்ணல் கிறேஸியின் புகழுடல் தீயுடன் சங்கமமாகியது.

வீதிகள் எங்கும் மகர தோரணங்களும், விடுதலைப் புலிகளின் புரட்சிக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. [க]

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regesteted as a News Paper at the General Post office Sri Lankaunder Licence numper B/100306/81.